# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 AUGUST

மலர்: 7 இதழ்: 11 2014 ஆகஸ்ட் விலை: ரூ. 5







## பயங்கரவாதத்தை வேர் அறிந்து அழிப்போம்!






## பயங்கரவாதம் (Terrorism) - இச்சொல்லின் கதை!

இந்த சொல் உருவாக்கப்பட காரணமாக இருந்த நிகழ்ச்சியும் நபரும்... 1790 ம் ஆண்டு ஏற்பட்ட பிரஞ்சுப்புரட்சியின் போது உருவாக்கப்பட்ட சொல் இது. 1793 மற்றும் 1794 ஆண்டுகளில் ஆட்சிச்செய்த மேக்ஸிமிலின் ரோப்ஸியர் ஆட்சியை பயங்கரவாத ஆட்சியாக இவ்வுலகம் வர்ணித்தது. அவர் சுமார் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் தலையை துண்டித்தார். வராலற்றுக்குறிப்பில் இன்னும் விளக்கமாக பார்த்தால்...

சுமார் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களை கைது செய்த அவர் அதில் சுமார் 40000 பேருக்கு மரண தண்டனை வழங்கினார். இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான நபர்களை நாடு கடத்தினார். மீதமுள்ள இரண்டு இலட்சம் பேர்களை சித்ரவதை செய்து பசி, பட்டினி போட்டு சிறையிலேயே இறக்க செய்தார்.

## ஊடகங்களின் இரட்டை நிலை!

- 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்களை கொன்ற ஹிட்லர்........
- இந்திய பிரதமர் இந்திரகாந்தியை கொன்ற அவர் பாதுகாப்பு படை வீரர்கள்.......
- தேச தந்தை காந்தியை கொன்ற கோட்சே...
- 749 பயங்கரவாத தாக்குதல்களை நடத்திய உல்பா தீவிரவாதிகள்....
- அப்பாவி தமிழர்களை கொன்று குவித்த ராஜபக்ஷே....
- பாலஸ்தீன மக்களை சொந்த நாட்டிலேயே கொன்று குவிக்கும் இஸ்ரேல்....

என யாருமே அவர்கள் சார்ந்த மதத்தின் அல்லது கொள்கையின் பெயரால் அடையாளம் காட்டப்படுவதில்லை. ஆனால் இஸ்லாம் என்ற கொள்கையால் உந்தப்பட்டு தங்கள் உரிமைகளை மீட்பதற்காகப் போராடுபவர்களை மட்டும் மதத்தின் பெயரால் அடையாளம் காட்டுவது ஊடகங்களின் திட்டமிட்ட வஞ்சனையே என்று முஸ்லிம்கள் கருதுகிறார்கள்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 AUGUST

மலர்: 7 இதழ்: 11 2014 ஆகஸ்ட் விலை: ரூ. 5


## பொருளடக்கம்

- இந்த மாத இதழின் பக்கங்கள் "பயங்கரவாதத்தை வேர் அறிந்து அழிப்போம்!" என்ற சிறு நூலுக்காக அர்பணிக்கப் படுகின்றன.
- வாசகர் எண்ணமும் பிரார்த்தனைப் பலகையும் இதழின் இறுதியில்!

**ஆகவே, உங்களுக்குக் கொடுக்கப் பட்டிருப்பதெல்லாம், இவ்வுலக வாழ்ககையின் (அற்ப) சுகங்களேயாகும் நம்பிக்கை கொண்டு, தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பவர்களுக்கு, அல்லாஹ்விடம் இருப்பது மிகவும் மேலானதும் நிலையானதுமாகும். (திருக்குர்ஆன் 42:36)**


published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

# பயங்கரவாதத்தை வேர் அறிந்து அழிப்போம்!

ஒரு வலுவான பேட்டை ரவுடி... அவனையும் அவன் கும்பலையும் தட்டிக்கேட்க யாரும் அவ்வூரில் இல்லை. அவனது தொல்லைகளில் இருந்து தப்பிக்க அவனுக்கு தவறாமல் அவ்வூர் மக்கள் தங்கள் உழைத்து சம்பாதிப்பவற்றில் இருந்தும் தங்கள் பெண்களின் கற்பை அடகு வைத்தும் கப்பம் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்களது கண்ணீரும் கவலைகளும் அவனுக்கு ஒரு பொருட்டேயல்ல. காவல்துறை உட்பட யாரும் அவனது செயல்பாடுகளில் குறுக்கிட முடியாத அளவுக்கு வலுவான ஆதிக்கம் அவனுடையது...... இப்போது இவன் ஏதோ ஒரு தவிர்க்கமுடியாத காரணத்துக்காக அந்த அவ்வூரை விட்டு விலக வாழ வேண்டிய ஒரு சூழ்நிலை. ஆனாலும் அவனுக்கு சேரவேண்டியவற்றை சேர்ப்பிக்க அடியாட்களும் அங்கு உள்ளார்கள். இப்படிப்பட்டவன் அவ்வூரை விட்டு விலகிச் செல்லும்போது "மக்களே இன்று முதல் நீங்கள் சுதந்திரமாக இருக்கலாம். இனி நீங்கள் எனக்கு கப்பம் கட்டத் தேவையில்லை!" என்று அறிவித்து விட்டா செல்வான்? .....அப்படி ஒன்றைக் கற்பனை செய்துகூட பார்க்க முடியாதல்லவா?

ஒரு சிறு பேட்டை ரவுடியின் நிலையே இது என்றால் ஆசிய, ஆப்ரிக்க, ஐரோப்பிய கண்டங்களின் பெரும் நிலப்பரப்புகளையும் நாட்டு வளங்களையும் தவறாமல் கொள்ளை அடித்து அனுபவித்து வாழ்ந்த காலனி ஆதிக்க சக்திகள் தங்கள் ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளை முற்றிலும் துறந்துவிட்டா செல்வார்கள்? அதுவும் தங்களைத் தட்டிக்கேட்க உலகில் யாரும் இல்லை என்ற நிலையில் இருப்பவர்களிடம் இதை சற்றேனும் எதிர்பார்க்க முடியுமா? இதைப் புரிந்துகொண்டால் இன்று உலகில் நடக்கும் பயங்கரவாத செயல்களுக்கு பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

அந்த பேட்டை ரவுடி நியமித்த அடியாட்களைப் போன்றவர்களே இன்று பெரும்பாலான நாடுகளை ஆள்பவர்கள். இவர்கள் தங்கள் நாட்டுவளங்களை தவறாமல் தங்கள் தலைமைக்கு தவறாமல் பல வழிகளில் தாரை வார்க்கிறார்கள். இவற்றுக்குத் தடையாக நிற்பவர்களை பேட்டை ரவுடிகள் எவ்வாறு எதிர்கொள்வார்களோ அவ்வாறே இவ்வரசுகள் எதிர்கொள்கின்றன. நாளடைவில் அந்த பேட்டை ரவுடி ஒரு மாநிலத்தின் முதல்வர் ஆகிவிட்டால் என்ன நடக்கும் சிந்தித்துப்பாருங்கள்.... இன்று இஸ்லாமியர்களை பயங்கரவாதிகளாக சித்தரிப்பதும் அதன் பேரில் அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களும் இந்த உலகளாவிய சதியின் அங்கங்களே! ஆயுதங்களும் தொழில் நுட்பமும் ஊடகங்களும் இவர்கள் உலகுக்கு முன் நடத்தும நாடகங்களுக்கு வெகுவாக துணைபோகின்றன.

## ஊடகங்களின் இரட்டை வேடம்!

லட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்த ஹிட்லரும் ஹிரோஷிமா நாகசாகி மீது அணுகுண்டு வீசி கோடிக்கணக்கான மக்களை அழித்தும் அங்கஹீனர்களாக்கவும் செய்த அமெரிக்காவும்..... போர் என்ற பெயரில் அப்பாவி மக்களை இன்று கொன்று குவிக்கும் இஸ்ரேலும் சமீபத்தில் கொன்று குவித்த இலங்கை அரசாங்கமும், புலிகளும்....என யாரையுமே அவர்கள் சார்ந்த கொள்கையையோ மதத்தையோ நோக்கி யாரும் கை நீட்டுவதில்லை.

ஆனால் தங்கள் சொந்த நாட்டை ஆக்கிரமித்து மக்களைக் கொன்று குவிக்கும் அமெரிக்காவுக்கு எதிராகப் போராடும் ஆப்கானிய, ஈராக்கிய மக்களையும் இஸ்ரேலுக்கு எதிராகப் போராடும் பாலஸ்தீன மக்களையும் இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் கூறிவருவதைக் காண்கிறீர்கள்.

இஸ்லாத்திற்கு எதிராக அப்படியொரு வெறுப்பு ஏன் உலகெங்கும் உண்டாக்கப்படுகிறது? யாரால் உண்டாக்கப் படுகிறது? .... இரண்டுமே ஆராயவேண்டிய விடயங்களே!

அதற்கு முக்கியமான காரணம் உள்ளது.... அது என்ன?

## அநியாயங்களுக்கு எதிரி இஸ்லாம்!

இன, நிற, மொழி, நாடு, போன்ற வரம்புகளைக் கடந்து இஸ்லாம் மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதால் உலகெங்கும் இக்கொள்கை அதிவேகமாக பரவுகிறது என்பது ஒரு காரணம். அது பரவப்பரவ இக்கொள்கை மக்களிடம் ஏற்படுத்தும் விழிப்புணர்வு அவர்களை வல்லரசு நாடுகளும் ஏகாதிபத்திய சக்திகளும் நலிந்த நாடுகளில் நடத்திவரும் கொள்ளைகளுக்கு எதிராகத் திருப்புகிறது என்பது மற்றொரு காரணம். ஆம், பூமியில் அதர்மத்துக்கும் அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிரான இஸ்லாத்தின் உறுதியான நிலைபாடு வல்லரசுக்களின் ஏகாதிபத்திய அராஜகங்களுக்கு கடுமையான எதிரி என்பதால் இஸ்லாம் மேற்கொண்டு பரவாமல் தடுக்க தங்கள் ஊடகங்களின் ஆதிக்கத்தால் இஸ்லாமியர்களை பயங்கரவாதிகளாக சித்தரிக்கிறார்கள் என்பதே உண்மை!

## இஸ்லாம் கற்பிக்கும் தர்மம் பரவும்போது என்ன நடக்கும்?

ஒன்றே மனித குலம், அனைவருக்கும் ஒருவன் மட்டுமே இறைவன் என்பதும் அந்த இறைவனிடம் மீளுதலும் நியாயத் தீர்ப்பும் உள்ளது என்பதும் இஸ்லாத்தின் அடிப்படை போதனைகள் என்பதை அறிவீர்கள். இஸ்லாம் பரவப்பரவ மக்கள் ஏக இறைவனை மட்டுமே தங்களுடைய வணக்கத்திற்கு உரியவனாக ஏற்றுக் கொள்வார்கள். அந்த இறைவனின்

கட்டளைகளுக்கு உட்பட்டு பூமியில் நன்மையை ஏவவும் தீமையைத் தடுக்கவும் பாடுபடுவார்கள். பூமியில் மானிட சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டவும் கலகங்களும் குழப்பங்களும் அற்ற அமைதிமிக்க வாழ்வை நிலைநிறுத்தவும் தன்னலம் கருதாது ஈடுபடுவார்கள். இம்முயற்சியில் தங்கள் உயிர்களையும் அர்ப்பணிக்கத் தயங்க மாட்டார்கள்.

**தர்மம் பூமியில் நிலைநாட்டப் பட்டால்...**

● அங்கு இனம் மொழி, நிறம் இவற்றின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் மறைந்து மனித சகோதரத்துவம் நிலைபெறும். இழந்து போன மனித உரிமைகள் மீட்டுக் கொடுக்கப்படும்.

● கொலை, கொள்ளை, திருட்டு, மோசடி, இலஞ்சம், ஊழல், சூதாட்டங்கள் பதுக்கல். கலப்படம் போன்றவை ஒழியும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு இனி யாரும் பிழைப்பு நடத்த முடியாது.

● மது, போதை, விபச்சாரம், கள்ளக்காதல்கள், பெண்ணடிமைத்தனம் போன்றவை ஒழியும். ஒழுக்கம் நிறைந்த குடும்ப வாழ்வும் ஆரோக்கியமான மற்றும் அமைதியான சமூக வாழ்வுமுறையும் அங்கு உடலேடுக்கும்.

●, கடவுளின் பெயரால் பாமரர்களைச் சுரண்டும் இடைத்தரகர்கள் ஒழிவார்கள். செலவற்ற எளிமையான இறைவழிபாட்டு முறை அமுலுக்கு வரும். மூடநம்பிக்கைகள் முற்றிலும் ஒழியும்.

● இடைத்தரகர்களும் நாடாள்வோரும் இணைந்து கடவுளின் பெயராலோ அல்லது மூடநம்பிக்கைகளின் பெயராலோ மக்களை கொள்ளையடிப்பதும் நாட்டு வளங்களை அபகரிப்பதும் வீண்விரயம் செய்வதும் நிற்கும். அவை ஆக்கபூர்வமான வழிகளில் செலவிடப்படும்.

● வல்லரசு நாடுகள் தங்கள் இராணுவ வல்லமையைக் காட்டி நலிந்த நாடுகளின் வளங்களைக் கொள்ளை அடித்து அவர்களை அடிமைகளாக நடத்தும் கொடுமை முற்றுப்பெறும். அரசு பயங்கரவாத அராஜகங்கள் அழிந்துவிடும்.

● இன்னும் அணுஆயுதம் அறிவியல், ஊடகங்கள் இவற்றின் மேன்மையை பயன்படுத்தி நலிந்த நாடுகளிக்கிடையே போர் மூட்டுவதும் உலகின் இயற்கை வளங்களில் நஞ்சூட்டி கொள்ளைகள் அடிப்பதும் இன்னும் இதுபோன்ற பல கொடுமைகள் முடிவுக்கு வரும்.

இப்போது நீங்களே கூறுங்கள், தர்மத்தை நிலைநாட்ட யாரேனும் பாடுபட்டால் அதை கொடுங்கோலர்களால் பொறுத்துக் கொள்ள முடியுமா? அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் இதை முழுமூச்சாக எதிர்ப்பார்கள். எப்படியெல்லாம் முடியுமோ அனைத்து வழிகளையும் தந்திரங்களையும் உபயோகித்து தர்மம் வளர்வதை முடக்கிப்போடும்

முயற்சியில் ஈடுபடுவார்கள்.

அதுதான் இன்று நடந்துகொண்டு இருக்கிறது.

# பயங்கரவாதத்தின் வேர்களை அறிவோம்!

உலக அளவில் பார்க்கும்போது அமெரிக்காவுக்கும் ஜி-8 நாடுகளுக்கும் ஆயுத விற்பனைதான் முக்கியமான வருமானம் ஈட்டும் வியாபாரம். உலகிலேயே அதிநவீன தொழில்நுட்பம் வாய்ந்த விமானங்கள், ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள். அணுவாயுதங்கள் மற்றும் இன்னபிற இராணுவத் தளவாடங்கள் இவர்களின் கைவசம் இருப்பதால்தான் உலகநாடுகள் அனைத்தையும் இவர்களால் அச்சுறுத்தி தங்களின் அடிமைகளாக அடக்கிவைக்க முடிகிறது. உதாரணமாக மத்திய கிழக்கில் எண்ணைவள நாடுகளான சௌதி அராபியா, குவைத், துபாய், கத்தர், போன்ற நாடுகள் இவர்களால் நியமிக்கப்பட்ட கைப்பாவை அரசர்களால் ஆளப்படுகின்றன. மட்டுமல்ல, எங்கெல்லாம் இவர்கள் காலனி ஆதிக்கம் செலுத்தி அந்நாட்டு வளங்களை கொள்ளை அடித்து வந்தார்களோ அவைகளில் பெரும்பாலானவற்றை இன்னும் தங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்கள் ஆதிக்கத்தின் கீழே கொண்டுள்ளார்கள்.

ஆயுதங்களை உலக சந்தையில் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காக சிறு சிறு நாடுகளுக்கு இடையே பகைமையை மூட்டி ஒருவர்க்கொருவர் அடித்துக் கொள்ள வைப்பார்கள். அல்லது நாடுகளுக்குள்ளேயே சிறுசிறு குழுக்களைத் தூண்டி அரசுகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டுவார்கள். ஆயிரக் கணக்கில் அல்லது இலட்சக்கணக்கில் மனித உயிர்கள் மாய்வது இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. தங்கள் வருமானமும் ஆதிக்கமும் தடைபெறக் கூடாது. இது ஒன்றுதான் இவர்களின் இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதற்காக ஒருபுறம் இராணுவ அடக்குமுறைகளையும் மறுபுறம் தங்கள் கைவசம் உள்ள பத்திரிகை, டிவி, ரேடியோ போன்ற ஊடகங்களையும் தந்திரமான முறையில் கையாள்கிறார்கள். இவர்களின் கைப்பாவை அரசுகளுக்கு எதிராக மனித உரிமைகள் கோரி புரட்சி செய்பவர்கள் உலகுக்கு முன் தீவிரவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர நினைக்கும் நாடுகளுக்குள் கிளர்ச்சியாளர்களை உருவாக்கி அவர்களை உலகுக்கு முன் புரட்சியாளர்களாகவும் விடுதலைப் போராளிகளாகவும் சித்தரிக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நாடுகளில் கிளர்ச்சியாளர்களுக்கு இராணுவ பலமளித்து அந்நாடுகளைக் கைப்பற்றி கிளர்ச்சியாளர்களின் தலைவரை தங்கள் கைப்பாவை அரசராக அல்லது அதிபராக நியமிப்பார்கள். (சமீபத்திய உதாரணங்கள் : ஈராக், ஆப்கானிஸ்தான்)

அதிநவீன இராணுவத் தளவாடங்களே இவர்களது முக்கிய விற்பனைப் பொருள். அவற்றை உலக நாடுகளில் விற்க வேண்டுமானால் அவ்வாயுதங்களின் செயல்திறனை உலகுக்கு முன் காட்டியாக வேண்டும். அதற்காக சிறு நாடுகளுக்கிடையே இவர்கள் மூட்டிவிடும் போர்களுக்குப் புறம்பாக ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு இடையே குறைந்தபட்சம் ஒருமுறை பெரிய அளவிலான போரை எப்படியாவது நிகழ்த்துகிறார்கள். உலகெங்கும் ஊடகங்கள் மூலமாக மக்களை மூளைச்சலவை செய்து அதை நியாயப் படுத்தவும் செய்வார்கள். மக்கள் அதைப் பார்த்க்கிறார்கள். இப்படி அப்பாவி மக்களின் இரத்தத்தை ஆறாக ஒட்டி அதன்மீது ஆயுதக் கண்காட்சி நடத்துவது இவர்களது வாடிக்கை! இக்கண்காட்சியை தவறாது நடத்துவதன் மூலம் இவர்களுக்கு இரண்டு நேட்டங்கள்: ஒன்று ஆயுத விற்பனை. மற்றது உலக நாடுகளை பயமுறுத்தி தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது.

இப்போது கூறுங்கள், யார் பயங்கரவாதிகள்? இவர்களா? இல்லை சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு தங்களது நாட்டை மீட்பதற்காகப் போராடுபவர்கள்களா? அல்லது தங்களது மனைவி மக்களையும் உற்றார் உறவினர்களையும் இவர்களின் சூழ்ச்சிகளினால் பறிகொடுத்துவிட்டு தங்கள் உரிமைகளை மீட்பதற்காக போராட்டங்கள் நடத்துபவர்களா? அல்லது தங்களது நாடுகளில் இவர்களின் கைப்பாவை அதிபர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து நாட்டையும் நாட்டின் வளங்களையும் காப்பாற்றுவதற்காக முனைபவர்களா?

ஆனால் என்ன நடக்கிறது? இன்று ஊடகங்களின் ஆதிக்க பலத்தினால் உலகளாவிய முறையில் கொடுங்கோலர்கள் சமாதானப் பிரியர்களாகவும் இழந்த உரிமைகளையும் உடமைகளையும் மீட்பதற்காகவும் சமாதானத்தை நிலைநாட்டவும் போராடுபவர்கள் பயங்கர வாதிகளாகவும் சித்தரிக்கப் படுகிறார்கள்.

# பயங்கரவாதத்தை எவ்வாறு எதிர்கொள்வது?

வல்லரசுகள் நலிந்தோரின் நாட்டுவளங்களை கொள்ளை அடித்து வாழும் கொடூரம் தொடரும் வரை பயங்கரவாதம் என்பது பூமியில் தொடரவே செய்யும் என்பது வெட்டவெளிச்சம்! சக்தி படைத்தவர்கள் தங்கள்

ஆதிக்கத்தை நிலைநாட்ட கைகொள்ளும் பயங்கரவாதம் நலிந்தவர்களை கதியற்ற நிலைக்குத் தள்ளும்போது அதை எதிர்கொள்ள அவர்களும் தங்கள் தரப்பில் இருந்து தங்களாலான பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதையே நாம் உலகெங்கும் கண்டு வருகிறோம். இரண்டிலுமே பாதிக்கப் படுபவர்கள் பெரும்பாலும் அப்பாவிப் பொதுமக்களே. இருதரப்பாரும் திருத்தப் படவேண்டியவர்களே. இதை எவ்வாறு செய்து உலகில் அமைதியையும் தர்மத்தையும் நிலைநாட்டுவது? அதற்கு நடைமுறைக்கு சாத்தியமான வழிகளை காட்டிச் சென்றார்கள் இறைவனின் தூதர்கள். அந்த தூதர்களின் தொடரில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி(ஸல்) அவர்கள். இனி தொடர்வது அவர்கள் நமக்கு விட்டுச்சென்ற பாடங்கள்....

## நபிகள் நாயகமும் பயங்கர வாதமும்

சவுதி அராபியாவில் மக்கா நகரில் பிறந்து வளர்ந்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தமது நாற்பது வயது வரை சாதாரண மனிதராகவும், ஒரு வியாபாரியாகவும்தான் இருந்தார்கள். ஆனால் தாம் வாழ்ந்த மக்களிடையே உண்மைக்கும் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர்பெற்றவர்களாக இருந்தார்கள். மக்கள் அவரை ‘அல் அமீன்’ (நம்பிக்கைக்கு உரியவர்)) என்ற பட்டப்பெயர் கொண்டு மதிப்போடு அழைத்தார்கள்.

ஆனால் அவரைச் சுற்றி வாழ்ந்த மக்கள் பலவிதமான மூடநம்பிக்கைகளிலும் மூடப்பழக்கவழக்கங்களிலும் மூழ்கிக்கிடந்தார்கள். மக்காவில் இன்று காணப்படும் சதுர வடிவான கஅபா என்ற இறையில்லம் சுமார் 5000 வருடங்களுக்கு முன்னால் இப்ராஹீம் (ஆப்ரஹாம்) என்ற இறைத் தூதரால் ஏக இறைவனை வழிபடுவதற்காக கட்டப்பட்ட ஒன்றாகும். ஆனால் காலப்போக்கில் அதற்குள் 360 சிலைகள் நிறுவப்பட்டு தினம் ஒரு சிலைக்கு வழிபாடு என்றவாறு நடத்திக் கொண்டிருந்தார்கள். அதிகாரம் படைத்தவர்களும் பலம் வாய்ந்தவர்களும் இடைத்தரகர்களும் சேர்ந்து கடவுளின் பெயரால் மக்களை அடிமைப் படுத்தியும் கொடுமைப் படுத்தியும் வந்தனர். குலவேற்றுமையும் இனவேற்றுமையும் ஆழமாய் வேரூன்றியிருந்த காரணத்தால் அவர்களுக்குள்ளே சண்டைகளுக்கும் கலகங்களுக்கும் பஞ்சமில்லாமல் இருந்தது. பெண்ணடிமைத்தனமும் மூடநம்பிக்கைகளும் காரணமாக அவர்கள் பெண்குழந்தைகள் பிறந்தாலே இழிவு என்று கருதி அவர்களை உயிரோடு புதைக்கவும் செய்து வந்தார்கள். இன்னும் இவைபோன்ற பல அனாச்சாரங்களும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன.

தன்னைச் சுற்றி இவையெல்லாம் நடந்துகொண்டிருக்க இவற்றுக்கான

தீர்வுகளுக்காக அவரது மனம் ஏங்கிக கொண்டிருந்த வேளையில்தான் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் தூதராகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஜிப்ரீல் என்ற வானவர் மூலம் நபிகளாருக்கு இறைவன் புறத்திலிருந்து வேதவசனங்களும் இறைகட்டளைகளும் வழிகாட்டுதல்களும் வரத் துவங்கின.

முதன் முதலாக இறைவன் புறத்திலிருந்து இறங்கிய வசனங்கள் இவையே:

(முஹம்மதே!) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை கருவுற்ற சினை முட்டையிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் கண்ணியமானவன். அவனே எழுது கோலால் கற்றுத் தந்தான். அறியாதவற்றை மனிதனுக்குக் கற்றுத் தந்தான். (திருக்குர்ஆன் 96:1 – 5)

இவற்றைத் தொடர்ந்து வந்த இறைக் கட்டளைகளின் அடிப்படையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நாற்பதாம் வயதில் தம்மைக் கடவுளின் தூதர் என்று மக்களிடையே பிரகடனம் செய்தார்கள். இறைவன் புறத்திலிருந்து தான் பெறும் செய்திகளையும் எச்சரிக்கைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

- இந்த உலகம் இறைவனால் படைக்கப் பட்டது. இங்கு வாழும் மனிதர்கள் யாவரும் இறைவனுக்கு கீழ்படிந்து வாழக் கடமைப் பட்டுள்ளார்கள் . அவ்வாறு வாழ்ந்தால் மட்டுமே இவ்வுலகில் நீதியும் அமைதியும் ஏற்படும். மறுமையிலும் நீங்கள் மோட்சத்தை அடைய முடியும்.
- ஒருநாள் இவ்வுலகம் முற்றாக அழிக்கப்படும். மீண்டும் இறைவனிடமிருந்து கட்டளை பிறப்பிக்கப் படும்போது இவ்வுலகின் மீது வாழ்ந்து மறைந்த அனைத்து மனிதர்களும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவர். அன்று ஒவ்வொரு மனிதர்களும் இப்பூமியின் மேல் செய்த ஒவ்வொரு பாவமும் புண்ணியமும் எடுத்துக்காட்டப்பட்டு. விசாரிக்கப் படுவார்கள். விசாரணைக்குப் பிறகு புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் பாவிகளுக்கு நரகமும் விதிக்கப் படும். எனவே இறைவனின் கட்டளைகளை ஏற்று அவன் ஏவியவற்றைச் செய்யுங்கள். தடுத்தவற்றில் இருந்து விலகிக் கொள்ளுங்கள்.
- இறைவனின் கட்டளைகளில் முக்கியமானது அந்த ஏக இறைவன் மட்டுமே வணங்குவதற்குத் தகுதியானவன் என்று ஏற்றுக் கொள்வதாகும். அவனை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வணங்க வேண்டும். அவன் அல்லாத எதையுமே கடவுள் என்று சொல்வதோ வணங்குவதோ அறவே கூடாது. அவனுக்கு பதிலாக சிலைகளையோ உருவங்களையோ வணங்குதல் பெரும் பாவமாகும்.
- மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்களைப் போல் சமமானவார்களே. இனத்தாலோ, குலத்தாலோ, நிறத்தாலோ, மொழியாலோ யாரும் யாரையும்

விட உயர்ந்தவர்கள் அல்ல.

● மேலும் கொலை, கொள்ளை, வட்டி, சூதாட்டம், விபச்சாரம், போதைப் பொருட்கள், பொய், பித்தலாட்டம், மோசடி, ஏமாற்றுதல், போன்ற எல்லாத் தீமைகளிலிருந்தும் மனிதர்கள் விலகி இருக்க வேண்டும்‘‘

தான் இறைவனிடமிருந்து பெறும் செய்திகளை மக்கள் முன் எடுத்துரைத்து சத்தியப் பிரச்சாரத்தை துவங்கினார் நபிகள் நாயகம் (ஸல்).

கஃபா என்னும் ஆலயத்திலும், அதைச் சுற்றிலும் சிலைகளை நிறுவி அவற்றின் வழிபாட்டில் ஆழமாக மூழ்கிக்கிடந்த சமுதாயத்தில் ‘‘ஒரே ஒரு கடவுளை மட்டும் தான் வணங்க வேண்டும் மற்றவை கடவுள் அல்ல‘‘ என்று கூறினால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை யாரும் அனுமானிக்க முடியும்.

## எதிர்ப்பலைகள் ஒன்று சேர்ந்தால்....

ஆம், நபிகள் நாயகம் இந்த ஏக இறைக்கொள்கையைச் சொல்லச் சொல்ல மக்கள் மத்தியில் புரட்சி புயலென எழுந்தது. ஆரம்பத்தில் ஒருசில பலவீனமானவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும ்தான் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். நாளடைவில் மற்றவர்களையும் கவர ஆரம்பித்தது. ஆனால் மூதாதையர்கள் வளர்த்த மூடப் பழக்கவழக்கங்களில் மூழ்கிப் போயிருந்த பெரும்பான்மை மக்களோ இக்கொள்கைக்கு வன்மையான எதிரிகளாக மாறினார்கள்.

உண்மையாளர், நம்பிக்கைக்கு உரியவர் என்றெல்லாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாராட்டிய மக்கள் அவருக்கு பைத்தியம் என்று பட்டம் சூட்டினார்கள் அவர்களையும், அவர்களது கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களையும் சொல்லொனாத துன்புறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கினார்கள்.

உதாரணத்திற்காக ஓருசில சம்பவங்களை மட்டும் இங்கு காண்போம்:

● நபிகளார் பிரச்சாரம் செய்யும்போது அவரது முகத்தில் மண்ணை வாரித் தூவினார்கள். ‘பைத்தியக்காரர்’ ‘சூனியக்காரர்” என்று வசை பாடினார்கள்.

● கஅபா ஆலயத்தின் அருகே அவர் தன் நெற்றியை தரையில் வைத்துத் தொழுது கொண்டு இருக்கும்போது அவரது தலைமீது அறுக்கப் பட்ட ஒட்டகத்தின் சாணத்தையும் இரத்தத்தையும் கழிவுப் பொருட்களையும் கொண்டுவந்து கொட்டி அவர் தம் தலையைத் தூக்க இயலாமல் தத்தளிப்பது கண்டு எள்ளி நகையாடினர்.

● அவர் நடக்கும் பாதையில் முட்களைப் பரப்பிவைத்தார்கள். வீட்டிற்கு முன் கழிவுப் பொருட்களையும் குப்பைகளையும் கொட்டி வைத்தார்கள்.

● தாயிப் என்ற இடத்தில் அவர் பிரச்சாரம் செய்யும் வேளை சிறுவர்களை

ஏவிவிட்டு இரத்தம் சிந்த கல்லால் அடித்தார்கள்.

● இக்கொள்கையை ஏற்றுக் கொண்ட நலிந்தோர்களையும் அடிமைகளையும் கொன்று குவித்தார்கள். மூதாதையர்களின் மதங்களையும் கடவுளர்களையும் மதிக்காதவர்களுக்கு இதுதான் கதி என்று மக்களை அச்சுறுத்தினார்கள்.

● ஏக இறைவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன். அவனைத் தவிர எதுவும் வணக்கத்திற்கு உரியவை அல்ல (அரபியில் 'லா இலாஹ இல்லல்லாஹ்) என்று கூறியமைக்காக பகல் முழுக்க பாலைவனத்து சுடுமணலில் வெற்றுமேனியில் கிடத்தி பாறாங்கற்களை ஏற்றினார்கள்.

● தண்ணீர் தொட்டிமுன் முழங்காலிட வைத்து தலையை நீரில் அழுத்தி மூச்சு முட்ட வைத்து சிலைவழிபாட்டுக்குத் திரும்புமாறு பணித்தார்கள்.

● பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளால் உடலில் சூடிட்டு தாய்மதம் திரும்ப வற்புறுத்தினார்கள்.

● இன்னும் இவைபோன்ற பல்வேறுவகையான சித்திரவதைகளும் ஊரெங்கும் அரங்கேறிக் கொண்டு இருந்தன.

# இஸ்லாம் என்ற சீர்திருத்த இயக்கம்

இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் - நபிகள் நாயகம் ஒரு புதிய கடவுளை அறிமுகப்படுத்தி அதை வணங்க மக்களை அழைக்கவில்லை. ஒரு புதிய மதத்தை நிறுவி அதில் சேருமாறு மக்களை அழைக்கவில்லை. மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மைபயக்கக் கூடிய ஒரு அழகிய சீர்திருத்தக் கொள்கையை முன்வைத்து அதன்பால்தான் அழைத்தார்கள். இந்த சீர்திருத்த இயக்கத்துக்கு எதிராகத்தான் பயங்கரவாத அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

● ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்த நீங்கள் ஒருவருக்கு ஒருவர் சகோதரர்களே. குலமோ, இனமோ மொழியோ நிறமோ இடமோ உங்களைப் பிரித்துவிடக் கூடாது. உங்களுக்குள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டும் சுரண்டிக் கொண்டும் மோசடி செய்தும் அமைதி இழந்து தவித்துக் கொண்டிருக்கும் என் சமுதாயமே! வாருங்கள் இதற்கொரு முடிவு கட்டுவோம்! ஒரு இனிய புதிய விடியலை நோக்கிப் பயணிப்போம்! இந்த குறிக்கோளை அடைய நீங்கள் மறந்துபோன சில உண்மைகளை நினைவூட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அழைக்கவே நான் இறைவனால் அனுப்பப் பட்டுள்ளேன் என்றார் நபிகளார்!

## மறுக்கமுடியாத உண்மைகள்

● நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய முதல் உண்மை எதுவெனில்

இவ்வுலகத்தை படைத்த இறைவன் ஒரே ஒருவனே என்பதும் அவன் மட்டுமே நம் வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதுதான். அவன்தான் நமக்கு தன் புறத்திலிருந்து எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கி நம்மை பரிபாலித்துக் கொண்டிருக்கிறான். அவன் மட்டுமே நம் நன்றிக்கும் வணக்கத்திற்கும் தகுதியானவனும் நம் பிரார்த்தனைகளை ஏற்பவனும் ஆவான். அவனைத் தவிர மற்ற அனைத்துமே அவனது படைப்பினங்களே. அவற்றை வணங்குவதும் உயிரற்ற உணர்வற்ற பொருட்களை கடவுள் என்று அழைப்பதும் எல்லாம் இறைவனை சிறுமைப் படுத்தும் செயலும் வீணும் மோசடியும் ஆகும். எனவே பொய்யான தெய்வங்களை விட்டுவிட்டு படைத்தவன்பால் வாருங்கள்.

● அடுத்த உண்மை - இவ்வுலகம் தற்காலிகமான ஒரு பரீட்சைக்கூடம் போன்றது. இதில் நீங்கள் இறைவனின் வழிகாட்டுதல் படி அவன் கூறும் நன்மைகளைச் செய்தும் தீமைகளில் இருந்து விலகியும் வாழ்ந்தீர்களானால் உங்கள் தனி நபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் அமைதியைக் காண முடியும். அவ்வாறு நீங்கள் படைத்தவனுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தீர்களானால் அதற்குப் பரிசாக அவன் மறுமையில் நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்கத்தில் உங்களைப் புகுத்துவான். மாறாக அவனுக்குக் கட்டுப் படாமல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்தீர்களானால் அதற்கு தண்டனையாக மறுமையில் நரகத்தையும் வைத்துள்ளான்.

● இந்த மறுக்கமுடியாத சத்தியங்களை ஏற்றுக் கொண்டு இறைவனிடம் திரும்புங்கள். அவன் நமக்காக வகுத்துத் தந்துள்ள அழகிய வாழ்க்கைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். பூமியை அமைதிப் பூங்காவாக மாற்றுவோம் வாருங்கள்.

எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தத் திட்டத்தின் பால்தான் நபிகள் நாயகம் (ஸல்) மக்களை அழைத்தார்

## ஆனால் என்ன நடந்தது?

புரிந்து கொண்டவர்கள் இந்த உயர்ந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். முழுமூச்சாக அண்ணலாரோடு இணைந்து பாடுபட்டார்கள். கொண்ட கொள்கைக்காக தங்களின் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்யத் துணிந்தார்கள். படைத்த இறைவனுக்காக அனைத்தையும் இழந்தாலும் நஷ்டம் ஏதும் இல்லையல்லவா? மறுமையில் சொர்க்கமல்லவா காத்திருக்கிறது!

ஆனால் இக்கொள்கையின் அருமையைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் பெரும்பான்மையாக இருந்தார்கள். இந்த இயக்கம் வெற்றி பெற்றால் அனைவரும் சுபிட்சமாக வாழலாம் என்பதைப் புரிந்து கொள்வதிலிருந்து

சிலரை அவர்களுடைய தற்பெருமையும் சிலரை சுயநலமும் சிலரை ஆதிக்கபலமும் தடுத்தது. பெரும்பாலோரை முன்னோர்கள் எது செய்தாலும் சரியே என்ற குருட்டு நம்பிக்கை தடுத்தது!

## தொடர்ந்த சித்திரவதைகள்

இயக்கம் தொடங்கி பதிமூன்று வருடங்கள் தொடர் சித்திரவதைகளுக்கு மத்தியில் கழிந்தது. ஒரு கட்டத்தில் ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள கணவாய்க்கு நபிகள் நாயகத்தையும், அவர்களது சகாக்களையும் விரட்டியடித்து சமூகப் புறக்கணிப்பும் செய்தனர். பல நாட்கள் இலைகளையும், காய்ந்த சருகுகளையும் மட்டுமே உணவாகக் கொள்ள வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள். ‘‘நபிகள் நாயகத்துடன் யாரும் பேசக் கூடாது அவருடன் யாரும் எந்த உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது‘‘ என்றெல்லாம் ஊர்க் கட்டுப்பாடு போட்டார்கள்.

ஒன்று இரண்டல்ல, பதிமூன்று வருட காலம் தொடர்ச்சியாக சித்திரவதைகளை அனுபவிக்க எவ்வாறு இவர்களால் முடிந்தது? கொடுமையாளர்களுக்கு எதிராக இவர்கள் ஒன்றுமே செய்யவில்லையா? எண்ணிக்கைப் பெருகும் போது எதிர்த்து நிற்க என்ன தடை? இதைத் தான் நாம் முக்கியமாக கவனிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

## பொறுமை என்ற ஆயுதம்

ஆம், தன்னை மக்கள் தாக்கியபோதும் நபிகளார் பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்கள். தன் சகாக்கள் தாக்கப் பட்டபோதும் பொறுமையை மேற்கொள்ளுமாறு பணித்தார்கள். இறைவனின் கட்டளைகளை அவர்களுக்கு நினைவூட்டினார்கள்.

நன்மையும், தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும் உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார். (திருக்குர்ஆன் 41 : 34)

“அவர்கள் சகித்துக் கொண்டதாலும், நன்மையின் மூலம் தீமையைத் தடுத்ததாலும், அவர்களுக்கு நாம் வழங்கியதை (நல்வழியில்) செலவிட்டதாலும் அவர்களுக்கு இரண்டு தடவை அவர்களின் கூலிகள் வழங்கப்படும்.” (திருக்குர்ஆன் 28 :54)

# தர்மத்தை நிலைநாட்ட பொறுமை தேவை

மக்காவிற்கு அருகே இரு மலைகளுக்கு இடையே அமைந்திருந்த தாயிப் நகரில் தனது பிரச்சாரத்திற்காக சென்ற போது மிக மிகக் கடுமையாக கல்லால் அடித்துத் துரத்தப் பட்டார்கள் நபிகளார். இரத்தம் தோய்ந்த உடலோடு கண்ணீர் மல்க இறைவனிடம் பிரார்த்தித்தார் நபிகளார். உடனே தனது வானவர்களை அனுப்பிவைத்தான் இறைவன். “ஆணையிடுங்கள்

நபியே, உங்களை வேதனைக்குள்ளக்கிய இவ்வூர் மக்களை இம்மலைகளுக்கிடையில் நசுக்கிவிட நாங்கள் தயார்!" என்றார்கள் வானவர்கள். ஆனால் கருணை வடிவான நபிகளார் என்ன சொன்னார்கள் தெரியுமா? "இன்று இவர்கள் ஏற்காவிட்டாலும் இவர்களின் தலைமுறைகளில் இருந்து நல்லோர் உருவாவார்கள் என்று நம்புகிறேன்" என்று கூறி அவர்களைத் தடுத்தார்கள்.

## மக்களை அழிப்பதல்ல திருத்தி எடுப்பதே நோக்கம்

ஏனெனில் இங்கு தாக்குபவர்கள் நமக்கு எதிரிகளே அல்ல. அவர்களைப் பீடித்துள்ள ஷைத்தான் தான் நமக்கு எதிரி. பொறுமை மூலமும் விவேகத்தைக் கைக்கொள்வது மூலமும்தான் இம்மக்களைத் திருத்தியெடுத்து நேர்வழிக்குக் கொண்டுவர முடியும் என்பதை நன்றாக உணர்ந்திருந்தார்கள் அண்ணல் நபிகளார்.

தங்களுக்கு ஏற்படும் சோதனைகள் குறித்து, நபித்தோழர்கள் வந்து முறையிட்ட போது நபிகளார் (ஸல்) அவர்கள் என்ன கூறினார்கள் தெரியுமா? இதோ உடம்பு முழுக்க இரும்புக் கம்பியால் சூடிடபட்ட வடுக்களைத் தாங்கிய நபித்தோழர் கபாப்(ரலி) அவர்கள் பிற்காலத்தில் கூறுகிறார்கள்: "இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கஅபாவின் நிழலில் தம் சால்வை ஒன்றைத் தலையணையாக வைத்துச் சாய்ந்து கொண்டிருந்த போது அவர்களிடம் (இஸ்லாத்தின் எதிரிகள் எங்களுக்கிழைக்கும் கொடுமைகளை) முறையிட்டபடி எங்களுக்காக (இறைவனிடம்) நீங்கள் உதவி கோர மாட்டீர்களா? எங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்ய மாட்டீர்களா? என்று கேட்டோம்.

அதற்கு அவர்கள், "உங்களுக்கு முன்னிருந்தவர்களிடையே (ஏகத்துவக் கொள்கையை ஏற்று இறைத்தூதரின் மீது நம்பிக்கை கொண்ட) ஒரு மனிதருக்காக மண்ணில் குழி தோண்டப்பட்டு, அவர் அதில் நிறுத்தப்பட ரம்பம் கொண்டு வரப்பட்டு, அவரது தலை மீது வைக்கப்பட்டு அது கூறுகளாகப் பிளக்கப்படும்.

ஆயினும் அ(ந்தக் கொடுமையான)து அவரை அவரது மார்க்கத்திலிருந்து பிறழச் செய்யவில்லை. (பழுக்கக் காய்ச்சிய) இரும்புச் சீப்புகளால் அவர் (மேனி) கோதப்பட அது அவரது இறைச்சியையும் கடந்து சென்று அதன் கீழுள்ள எலும்பையும், நரம்பையும் சென்றடைந்து விடும். அதுவும் கூட அவரை அவரது மார்க்கத்திலிருந்து பிரழச் செய்யவில்லை. அல்லாஹ்வின் மீதாணையாக! இந்த (இஸ்லாத்தின்) விவகாரம் முழுமைப்படுத்தப்படும். எந்த அளவிற்கென்றால் வாகனத்தில் பயணம் செய்யும் ஒருவர் (யமனில் உள்ள) ஸன்ஆ விலிருந்து ஹளர மவ்த் வரை பயணம் செய்து செல்வார்.

(வழியில்) அல்லாஹ்வைத் தவிர அல்லது தன் ஆட்டின் விஷயத்தில் ஓநாயைத் தவிர வேறெவருக்கும் அவர் அஞ்ச மாட்டார். ஆயினும் நீங்கள் தான் (பொறுமையின்றி) அவரசப்படுகிறீர்கள்" என்று கூறினார்கள்.
அறிவிப்பவர்: கப்பாப் இப்னு அல் அரத் (ரலி) நூல்: புகாரி3612, 3852
ஆம், தர்மத்தை பூமியில் நிலைநாட்ட உறுதியான கொள்கைப் பிடிப்பும் அளவுகடந்த பொறுமையும் தேவை என்பதையே எடுத்துரைக்கிறார்கள்.

# பொறுமையின் எல்லை?

எதற்கும் ஓர் எல்லை உண்டு. சித்திரவதைகள் தாங்கமுடியாமல் போனால்...? அதற்கும் வழிகாட்டுகிறார்கள் நபிகளார். சித்திரவதைகளுககு ஈடு கொடுக்க முடியாமல் போன நபித்தோழர்கள் சிலரை அபீசீனியாவுக்கும், வேறுசிலரை மதீனா எனும் நகருக்கும் நபிகளார் குடிபெயர்ந்து செல்லுமாறு பணித்தார்கள். ஆம், அடக்குமுறைகள் கட்டுக்கடங்காமல் போனபோதும் எதிர்த்து நின்று பதிலடி கொடுக்க அனுமதி கொடுக்கவில்லை நபிகளார். மாறாக ஊர்விட்டு வேறிடம் சென்று குடியிருக்கச் சொன்னார்கள்.

இத்தனை அடக்குமுறைகளையும் மீறி இஸ்லாம் மக்காவிலும் தொடர்ந்து வெளியூர்களிலும் குறிப்பாக மதீனாவில் பரவி வளர்ந்து கொண்டு இருந்தது. முடிவில் "இவரை உயிரோடு விட்டு வைத்தால் ஊரையே கெடுத்து விடுவார் எனவே கொலை செய்து விடுவோம்" என்று திட்டம் வகுத்தார்கள்.

அப்போது இறைவனின் கட்டளைப் பிரகாரம் நபிகள் நாயகம் தாயகம் துறந்து தம் தோழர் அபூபக்கர் அவர்களுடன் மதீனா என்னும் நகர் நோக்கி தியாகப் பயணம் மேற்கொண்டார்கள். மதீனா நகரில் இஸ்லாம் என்ற இனிய கொள்கை ஏற்கெனெவே வெகுவாகப் பரவியிருந்த காரணத்தால் நபிகளாருக்கு மகத்தான வரவேற்பு காத்திருந்தது. அவ்வூர் மக்கள் நபிகள் நாயகம் (ஸல்) பிரச்சாரம் செய்த கொள்கையையும் ஏற்றார்கள். நபிகள் நாயகத்தைத் தங்களின் தலைவராகவும் ஏற்றுக் கொண்டார்கள்.

மக்காவிலோ நபிகளாரின் வளர்ச்சி சத்திய மறுப்பாளர்களுக்கு பெரும் கலக்கத்தை உண்டாக்கியது. நபிகள் நாயகத்தையும் அவர்களது கொள்கையையும் வளரவிட்டால் தங்களது ஆதிக்கமும் செல்வாக்கும் பறிபோய்விடும், இன்று ஊரைவிட்டு துரத்தப் பட்ட அவர்கள் நாளை பழிவாங்க படை திரட்டி வரலாம் என்ற அச்சம் அவர்களை ஆட்கொண்டது. எப்படியாவது நபிகளாரையும் அவரது சகாக்களையும் அழித்துவிட வேண்டும் என்ற முடிவுடன் ஆயிரம் பேர் கொண்ட

படையைத் திரட்டிக் கொண்டு போருக்கு வந்தார்கள் மக்கத்துக் கொடுங்கோலர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தர்மத்தை நிலைநாட்டப் புறப்பட்டவர்கள் என்ன செய்ய வேண்டும்? இதோ வழிகாட்டுகிறான் இறைவன்.

## எதிர்த்துப் போராட அனுமதி

இப்போதுதான் எதிர்த்து நிற்க அனுமதி அளிக்கிறான் இறைவன். கீழ்கண்ட திருக்குர்ஆன் வசனங்களை இறக்கிவைத்து எதிர்த்துப் போரிடும் அனுமதியை அளித்தான் இறைவன்..

“போர் தொடுக்கப்பட்டோருக்கு – அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த இறைமறுப்பாளர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன்.” (திருக்குர்ஆன் 22:39)

பலஹீனமான ஆண்களையும் பெண்களையும், சிறு குழந்தைகளையும் பாதுகாப்பதற்காக, அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் போர் செய்யாதிருக்கக் காரணம் யாது? (அவர்களோ) “எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் இருக்கும் இவ்வூரைவிட்டு எங்களை வெளிப்படுத்துவாயாக் எங்களுக்காக உன்னிடமிருந்து தக்க ஒரு பாதுகாவலனை அளித்தருள்வாயாக் இன்னும் எங்களுக்காக உன்னிடமிருந்து ஓர் உதவியாளனையும் அளித்தருள்வாயாக” என்று பிரார்த்தனை செய்கிறார்கள். (திருக்குர்ஆன் 4:75)

பூமியில் தர்மம் நிலைநாட்டப் படவேண்டுமானால் நன்மைகள் ஏவப்படும் அதேவேளையில் தீமைகளை வேரறுக்கவும் வேண்டும். ஆனால் தீமைகளை வளர்ப்பதையும் தீமைகளை வைத்தே வயிறு வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு அதர்மவாதிகள் தர்மத்திற்கு எதிராக அணிதிரண்டு வரும்போது அதை தடுத்து நிறுத்துவது தர்மத்தின் பாதுகாவலர்கள் மீது கடமையாகிறது. எனவே தற்காப்புக்கான போருக்குத் தயாரானார்கள் நபிகள் நாயகமும் தோழர்களும். வெறும் 313 பேர் கொண்ட இறைவிசுவாசிகளின் படை மூன்று மடங்கு பெரிய மக்கத்துப் படையை மதீனாவுக்கு அருகேயுள்ள பத்ர் என்ற இடத்தில் எதிர்கொண்டது. இறைவனின் அருள் கொண்டு இச்சிறிய படை கொடுமைக்காரர்களின் படையை வென்றது. சில முக்கியமான கொடுமைக்காரர்கள் அப்போரில் கொல்லப்பட்டனர்.

# தற்காப்புக்காக மட்டுமே தர்மயுத்தம்

பதிமூன்று வருடம் தொடர்ந்த பயங்கரவாத அடக்குமுறைகளுக்கு உள்ளான பிறகு நபிகள் நாயகமும் தோழர்களும் சுமார் 500 கிலோமீட்டர் தொலைவிலுள்ள மதீனாவுக்குக் குடிபெயர்ந்த பின்னரும் அவர்களைத் தாக்க வந்தனர் மக்காவின் கொடுங்கோலர்கள். அந்த நிலையில் இறைவனின் அனுமதிக்குப் பிறகு தற்காப்புக்காக அவர்களோடு போர் புரிந்து வெற்றியும் பெற்றனர் நபிகளாரும் தோழர்களும்.

இத்தற்காப்புப் போர்மூலமும் நபிகள் நாயகத்தின் வழியாக பல பாடங்களை உலகுக்குக் கற்றுத் தருகிறான் இறைவன்:

- அதர்மத்துக்கு எதிரான போரில் எக்காரணம் கொண்டும் பொதுமக்களும் பாமரர்களும் அப்பாவிகளும் பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்படக் கூடாது. எதிரிகள் தாக்கவரும் போதும் அவர்கள் ஊருக்குள் வந்து மக்களைத் தாக்க விடாமல் ஊருக்கு வெளியிலேயே எதிர் கொள்கிறார்கள் நபிகளார்.
- போரில் எக்காரணம் கொண்டும் பெண்களும் குழந்தைகளும் கொல்லப் படக்கூடாது. நிராயுதபாணிகளைக் கொல்லக் கூடாது.
- சரணடைபவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- மரங்களை வெட்டக் கூடாது. பயிர்களை நாசம் செய்யக் கூடாது.
- இறந்துபோன சடலங்களை சிதைக்கக் கூடாது.
- இவைபோன்ற இன்னும் பல ஒழுங்குமுறைகள்......

தர்ம யுத்தத்தில் இவற்றையெல்லாம் இறைவிசுவாசிகள் பேணியே ஆகவேண்டும்.

இன்றைய காலகட்டத்துப் போர் நடைமுறைகளோடு பொருத்திப் பார்க்கும்போதுதான் இக்கட்டளைகளின் அருமையை நாம் உணர முடியும்.

அமேரிக்கா வியட்நாமைத் தாக்கியபோது ***BLU-82B/C-130*** என்ற உற்பத்திப் பெயரைக் கொண்ட, ***"Daisy Cutter "*** என்று செல்லமாக அழைக்கப்பட்ட நாசகார ஆயுதத்தை வியட்னாம் காடுகளில் போட்டார்கள். அந்த குண்டு வனாந்தரக் காட்டின் மத்தியில் 600 மீட்டர் சுற்றளவுக்கு மரங்களை அழித்து விடும். மரங்கள் அழிக்கப் பட்ட இடத்தில் ஒரு ஹெலிகாப்டர் இறங்கக்கூடிய அளவுக்கு இடம் கிடைத்துவிடுமாம். டெய்சி கட்டர் குண்டு வீச்சினால் பரவிய காட்டுத்தீயில் அங்கு வாழ்ந்த வியட்நாமிய மக்களும் மரணமடைந்தனர், சீறிப்பாய்ந்த தீச்சுவாலைகளால் மிரண்ட மக்களை எந்தப் பக்கம் ஓடுவது என்று தெரியாமல் தவிக்க வைத்தது. அதைப்பற்றி யாருக்குக் கவலை? ஹெலிக்காப்டர் தரையிறங்குமளவுக்கு இடம் கிடைத்ததல்லவா? அதுதானே ஆயுத வியாபாரத்திற்கு அவசியமான விளம்பரம்?

## மக்கள் நமக்கு எதிரிகள் அல்ல!

அடுத்ததாக, போரில் பிடிபட்ட கைதிகளை என்ன செய்தார்கள் நபிகளார்? அங்கும் நமக்குப் படிப்பினை இருக்கிறது.
போர் செய்யும் போது பிடிபட்ட எதிரி நாட்டு வீரர்களை தண்டிப்பதுதான் மரபாகப் பேணப்பட்ட அக்காலத்தில், நபி (ஸல்) அவர்களோ பத்ரு பேரின்போது பிடிபட்ட குறைஷிப் படையின் கைதிகளை தங்களின் எதிரிகளாகப் பாவிக்காது மதீனாநகர் சிறுவர்களுக்கு அக்குறைஷிகள் கற்றிருந்த கல்வியிலிருந்து எதையேனும் பயிற்றுவிக்கச் செய்து அவர்கள் அனைவரையும் மன்னித்து விடுதலை செய்தார்கள்
ஆம், மக்கள் நமக்கு எதிரிகளல்ல - ஒவ்வொரு மனித உயிரும் விலை மதிப்பற்றது - அவர்கள் திருந்த வாய்ப்பளிக்க வேண்டும் - என்பதையே உலகுக்கு மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்கிறார்கள் நபிகளார்!
தொடர்ந்து பல போர்கள் தர்மத்தின் காவலர்களுக்கும் அதர்மத்தின் காவலர்களுக்கும் மத்தியில் நடந்தன. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. இறுதி வெற்றி தர்மத்திற்கே. நபிகள் நாயகமும் தோழர்களும் திரளாக மீண்டும் தாயகமான மக்காவுக்கே திரும்பினார்கள்.

## மன்னிப்பின் சிகரம்

சுமார் பத்தாயிரம் தோழர்களுடன் முன்னறிவிப்பு இன்றி மக்காவுக்குள் நுழைந்தார்கள் நபிகளார். அவர்களை ஊரை விட்டே விரட்டியவர்களும், அவர்களின் குடும்பத்தினரையும் தோழர்கள் பலரையும் படுகொலை செய்தவர்களும் சித்திரவதை செய்தவர்களும் அனைவரும் தங்களின் கதி என்னவாகுமோ என்று பீதியடைந்தார்கள். சக்தி மிக்க ஆட்சியாளராகவும் தனது கட்டளைக்கு காத்திருக்கும் தோழர்களைக் கொண்ட சமுதாயத்தின் தலைவராகவும் மக்காவில் பிரவேசித்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கத்தியை எடுக்கவில்லை. இரத்தமும் சிந்தச் செய்யவில்லை. எவரையும் பழிவாங்கவில்லை. பயந்து நடுங்கி வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்த மக்கத்துக் குறைஷியரை அன்பொழுக அழைத்தார்கள் நபிகள் நாயகம் (ஸல்) : “குறைஷிகளே! உங்கள் மீது இன்றைய தினம் எந்தக் குற்றமுமில்லை. நீங்கள் அனைவரும் மன்னிப்பை பெற்று உரிய பாதுகாப்பைப் பெறுகிறீர்கள்” என்று பறைசாற்றினார்கள் மன்னிப்பின் சிகரம் நபிகள் நாயகம்.(அவர் மீது இறைவனின் சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக!)

## தர்மம் வெல்லும்போது....

உலக வரலாற்றில் சக்தி மிக்க ஒரு தலைவர் ஒரு உயிரைக் கூடப் பறிக்காது ஒரு நாட்டை வெற்றி கொண்டது இது ஒன்றாகத்தான் இருக்க முடியும்.
எதிரி நாட்டு நீர் நிலைகளை யானையை விட்டுக் கலக்கி -

விளைநிலங்களுக்குத் தீ வைத்து - தோற்றவன் பற்களைப் பிடுங்கி கோட்டைக் கதவில் பதித்து,- தோற்றவனின் மூக்கை அறுத்துக் கோரப்படுத்தி - தோல்வி கண்டவனின் மனைவியின் கூந்தலை வெட்டி அவமதித்து - போரில் பங்கு கொண்டவன், பங்கு கொள்ளாதவன் என்ற பாகுபாடின்றி அனைவரையும் வெட்டிக் குவித்து - இன்னபிற அக்கிரமங்கள் எல்லாம் நிறைவேற்றிப் பழிதீர்த்துக் கொள்ளும் நடைமுறைகளை அன்றும் இன்றும் கண்டு வருகிறோம். ஆனால் இங்கு நபிகளார் நடத்தியது போரல்ல தர்மத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சி!

ஆம், இங்கு உயர்ந்த ஒரு இலக்கை அடைவதற்காக சாமானிய மனிதர்களுக்கு இயல்பாகவே ஏற்படும் பழிவாங்கும் உணர்வுகளை எல்லாம் அடக்கியாண்டு முழு உலகுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள் நபிகளார்! அதாவது பூமியில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டும், மக்கள் படைத்தவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக சாந்தியோடும் சகோதர உணர்வோடும் இன்ப துன்பங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டும் வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை உலகெங்கும் உருவாக்க வேண்டும் என்ற மிக உயர்ந்த தனது இலக்கை அடைவதற்காக பொறுமையையும் மன்னிப்பையும் ஆயுதமாகக் கொள்கிறார்கள் நபிகளார். அநீதியை ஒழித்து நீதியையும் பகைமையை ஒழித்து நட்பையும் கலவரங்களை ஒழித்து அமைதியையும் நிலைநாட்டத்தான் கருணையுள்ள இறைவன் தன்னை தூதராக அனுப்பியுள்ளான் என்பதை உணர்ந்து கடமை உணர்வோடு நடந்துகொண்டார்கள் நபிகளார்.

7:199 எனினும் (நபியே) மன்னிப்பைக் கைக் கொள்வீராக! நன்மையைக் கடைபிடிக்குமாறு (மக்களை) ஏவுவீராக மேலும் அறிவீனர்களைப் புறக்கணித்து விடும்.

'நன்மையைக் கொண்டே தீமையைத் தடு' என்ற இறைக் கட்டளையை அட்சரம் பிசகாமல் பின்பற்றினார்கள். இந்த அணுகுமுறை கல்நெஞ்சங்களையும் கரைத்தது. மக்கள் மனமுவந்து இஸ்லாத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

# அழகிய முன்மாதிரி!

மக்கா வெற்றியைத் தொடர்ந்து சிலைவணக்கக் கலாச்சாரமும் மூடநம்பிக்கைகளும் அராபிய மண்ணில் வேரோடு அழிந்தன. மக்கள் அசத்தியத்தில் இருந்து சத்தியத்தைப் பிரித்து அறிந்து கொண்டனர். ஹிஜ்ரி 9, 10 ஆகிய ஆண்டுகளில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள மதீனாவை நோக்கி ஒன்றன் பின் ஒன்றாக மக்களின் குழுக்கள் வரத் தொடங்கின

(குறிப்பு: நபிகளார் தமது தாயகத்தைத் துறந்து மதீனா நோக்கி சென்ற பயணத்தில் இருந்து கணக்கிடப் படுவதே ஹிஜ்ரி ஆண்டு என்பது )

நபிகள் நாயகம்(ஸல்) தமது 63 ஆம் வயதில் மதீனாவில் மரணிக்கும் போது இன்றைய இந்தியாவை விட அதிக நிலப்பரப்பு அவரது ஆளுகையின் கீழ் வந்திருந்தது . சக்தி வாய்ந்த அரசியல் தலைமையும் ஆன்மீகத் தலைமையும் ஒருசேரப் பெற்றிருந்தாலும் மக்களின் மீது இஸ்லாத்தைத் திணிக்கவில்லை.

2:256. "இம்மார்க்கத்தில் எந்த வற்புறுத்தலும் இல்லை. வழி கேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. தீய சக்திகளை மறுத்து அல்லாஹ்வை நம்புபவர் அறுந்து போகாத பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார். அல்லாஹ் செவியுறுபவன் அறிந்தவன்."

என்ற இறைவனின் கட்டளைப்படி இம்மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் தனிநபர் சுதந்திரத்தில் உள்ள உரிமை என்ற அடிப்படையில் நபிகளாரின் ஆளுகையின் கீழ் எவரையும் இம்மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தவில்லை. யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவரவர் மதங்களை பின்பற்றி வாழ்ந்தனர்.

## மாற்றுமத மக்களோடு உறவு?

மாற்றுமத மக்களோடு நபிகளார் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை அறிய பின்வரும் சம்பவத்தை சற்று பாருங்கள்:

யூதப் பெண்ணொருத்தி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு நஞ்சூட்டப்பட்ட ஆட்டைக் கொண்டு வந்து கொடுத்தார். அதை நபி(ஸல்) அவர்கள் சாப்பிட்டார்கள். அவள் நபி(ஸல்) அவர்களிடம் அழைத்து வரப்பட்டு அவளிடம் இதுபற்றி விசாரித்தார்கள். "உங்களைக் கொல்லும் நோக்கத்தில் அவ்வாறு செய்தேன்" என்று அவள் கூறினாள். அல்லாஹ் உனக்கு அந்தப் பொறுப்பைத் தரவில்லை என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "இவளைக் கொன்று விடட்டுமா? என நபித்தோழர்கள் கேட்டதற்கு "கூடாது" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மத் ஆகிய நூல்களிலும் இந்த வரலாற்று நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது)

தனக்கு எதிராக யார் எந்தக் குற்றங்களைச் செய்த போதும் மன்னித்தே வந்திருக்கிறார்கள் ஆனால் மார்க்கத்திற்கு எதிராக – தர்மத்திற்கு எதிராக – யாரேனும் குற்றம் புரிந்தால் அதை தண்டிக்காமல் விட்டதில்லை என்று அவரது உற்ற தோழர்கள் அறிவிப்பது ஹதீஸ் நூல்களில் பதிவாகி உள்ளது.

## தர்மத்தை நிலைநாட்டும் வழிமுறை

பூமியில் இறைவனின் பெயரால் பொய்களைப் பரப்பி மக்கள் ஏமாற்றப் படுவதையும் சுரண்டப்படுவதையும் அதர்மம் பரவுவதையும் தடுத்து நிறுத்த உலகைப் படைத்து பரிபாலித்துவரும் ஏக இறைவனால் முழு அதிகாரத்தோடு அனுப்பப்படுபவர்களே இறைத்தூதர்கள் என்பதை நாம் நினைவு கூர வேண்டும். அவர்களின் முக்கியப் பணி மக்களிடையே 'இறைவனுக்குக் கீழ்படிதல்' (அரபு மொழியில் இஸ்லாம்) என்ற உயரிய சீர்திருத்தக் கொள்கையை பரப்பி அவர்களை நேர்வழிப் படுத்துவதே. மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கும் மக்களிடம் தெளிவான கடவுள்

கொள்கையையும் மறுமை நம்பிக்கையையும் விதைப்பதன் மூலம் அவர்களைத் திருத்தி இறைவனுக்குக் கட்டுப் பட்டவர்களாக மாற்றி அம்மக்களை ஈருலகிலும் - அதாவது இவ்வுலகிலும் மறுமை வாழ்விலும் - வெற்றி அடையச் செய்வதே இஸ்லாம்!

அதே வேளையில் அதர்மத்தின் காவலர்களும் அக்கிரமசீலர்களும் ஆதிக்க வர்க்கமும் இந்த சீர்திருத்தப் பணிக்கு எதிராக அணிதிரண்டு வரும்போது அவர்களுக்கு அடிபணிந்தால் தர்மம் பரவாது. அதர்மமும் அமைதியின்மையுமே அராஜகமுமே இவ்வுலகில் பரவும். அவர்கள் இப்பணிக்கு முட்டுக்கட்டைகளாக வரும்போது அவற்றை எவ்வாறு பக்குவமாகக் கடந்து தர்மத்தை நிலைநாட்டுவது என்பதுதான் நபிகளாரின் நடைமுறையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

# தர்மத்தை நிலைநாட்ட விழைவோர் கற்கவேண்டிய பாடங்கள்

தர்மத்தை நிலைநாட்டும் பணியில் நல்லோர்கள் ஈடுபடும்போது அதர்மத்தை வைத்து பிழைப்பு நடத்துவோரும் இறைவனின் பெயரால் மக்களைச் சுரண்டிப் பிழைப்போரும் தீவிரமாக அதை எதிர்ப்பார்கள். அடக்குமுறைகளையும் பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து விடுவார்கள். அதை எப்படி உரியமுறையில் எதிர்கொள்வது? எவ்வாறு அவர்களை வென்று பூமியில் தர்மத்தை நிலைநாட்டுவது? இதற்கான பாடத்தை இறைவனே அவனது திருத்தூதர் வாயிலாக அவரது வாழ்க்கை நடைமுறை மூலம் கற்றுத் தருகிறான்.

அன்னாரது வாழக்கை முன்மாதிரியில் இருந்து தர்மத்தை பூமியில் நிலைநாட்ட விழைவோர் மிகமிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய விடயங்கள் இவையே:

- இஸ்லாம் என்றால் அமைதி என்றும் கீழ்படிதல் என்றும் பொருள்படும். இறைவன் விதித்த விதிகளுக்குக் கட்டுப் பட்டு நடந்தால் இவ்வுலகிலும் அமைதியைப் பெறமுடியும், மறுமையிலும் அமைதியை, அதாவது மோட்சத்தைப் பெறமுடியும் என்பதே இதன் தத்துவம்.
- இஸ்லாம் என்பது இவ்வுலகைப் படைத்தவன் இயற்றி வழங்கும் ஒரு சீர்திருத்தக் கொள்கை. ‘ஒன்றே குலம், ஒருவனே இறைவன்’ என்பதும் மறுமையில் இறைவனிடம் விசாரணை உண்டு என்பதுமே இக்கொள்கையின் அடிப்படைகள். இந்த அடிப்படைகளை மக்களின் மனங்களில் ஆழமாக விதைத்து தனி நபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் தீமைகளிலிருந்து அவர்களை விலக்கி நற்குணங்களை உருவாக்கி அதன் மூலம் நாட்டில் தர்மத்தை நிலைநாட்டுவதே இதன் குறிக்கோள்.
- இது ஒரு கொள்கையே தவிர இனவாதமோ அல்லது ஒரு தேசிய வாதமோ

அல்ல. எந்த இனத்தவரும் எந்த நாட்டினரும், மொழியினரும், நிறத்தவரும் இக்கொள்கையை ஏற்று அதன்படி வாழலாம். இது அகில உலகுக்கும் அனைத்து மக்களுக்கும் முன்னோர்களுக்கும் பின்னோர்களுக்கும் சொந்தமானது. இதை எந்த நாட்டவரும் இனத்தவரும் மொழியினரும் சொந்தம் கொண்டாட முடியாது.

● இக்கொள்கைக்கு மதச்சாயமோ இனச்சாயமோ பூசுவது தவறு. இக்கொள்கையில் தங்களை இணைத்துக்கொண்டவர்கள் தங்களை ஒரு தனி இனமாக நினைத்துக் கொண்டு மற்றவர்களை அன்னியர்களாகவோ எதிரிகளாகவோ பாவிக்கக் கூடாது.

● மக்கள் எந்த இனத்தவர் ஆனாலும் எம்மொழியினர் ஆனாலும் எந்த நாட்டவர் ஆனாலும் எம்மதத்தவர் ஆனாலும் அவர்கள் யாரும் நமக்கு எதிரிகள் அல்ல. அவர்களை எல்லாம் கொன்றொழித்துவிட்டு நிலைநாட்டப்பட வேண்டியதல்ல தர்மம் என்பது. மாறாக மக்களிடையே இறையச்சத்தை விதைத்து அவர்களைச் சீர்த்திருத்துவதே நமது இலட்சியம்.

● தர்மத்தை நிலைநாட்டவேண்டுமானால் நன்மையை ஏவும் அதே வேளையில் தீமையைத் தடுக்கவும் பாடுபட வேண்டும். தர்மம் வளர்வதற்குத் தடையாக நிற்கும் சுயநல சக்திகளைக் கண்டு துவண்டுவிடாமல் இ.றைவன் நமக்குத் துணை நிற்கிறான் என்ற உணர்வோடு இவ்வியக்கத்தில் முனைய வேண்டும்.

● அதர்மத்தின் காவலர்கள் அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் நமக்கெதிராக கையாளும் போது பொறுமையையும் மன்னிப்பையுமே நமது முதல் ஆயுதங்களாகக் கொள்ளவேண்டும். ஆனால் ஒருபோதும் அவர்களுக்கு அடிபணிந்து விடக்கூடாது.

● கொடுமைகள் தாங்கமுடியாத அளவுக்கு எல்லை மீறும்போது தற்காப்புக்காக போர் புரியலாமே தவிர ஒருபோதும் பழிவாங்கும் நோக்குடன் போர் புரியலாகாது. மக்களை அழிப்பதல்ல நமது நோக்கம், மாறாக அவர்களை சீர்திருத்துவதே என்பதை நாம் நினைவு கூரவேண்டும்.

● இம்முயற்சி மூலம் இறைவனின் திருப்பொருத்தத்தை அடைவதுதான் நமது தலையாய நோக்கம் எனபதை மிகமிக முக்கியமாக நாம் மனதில் கொள்ளவேண்டும். இவ்வாழ்க்கை என்ற பரீட்சையின் ஓர் பாகமாகவே இதில் நாம் ஈடுபடுகிறோம். இம்முயற்சிகளுக்கு இறைவன் நிச்சயம் கூலி வழங்குகிறான் என்ற உணர்வு நம்மில் மேலோங்க வேண்டும். இவ்வுலகில் நமது முயற்சிகள் வெற்றிபெறவும் செய்யலாம். பலனளிக்காமலும் போகலாம். நமது உடல், பொருள், ஆவி என்பவற்றை நாம் இழக்கவும் நேரிடலாம். எதுவரினும் நமது எண்ணம் தூய்மையானதாக இருக்கும்வரையில் நமக்கு இழப்பு என்பதே இல்லை. நிச்சயம் இவற்றுக்காக மறுமை வாழ்க்கையில் அழியா இன்பங்கள் நிறைந்த சொர்க்க வாழ்வைப் பரிசாக தர உள்ளான்

என்ற நம்பிக்கையில் உறுதியுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும்.

● நாளை நமது முயற்சிகளுக்கு இறைவன் வெற்றியளித்து இவ்வுலகிலேயே தர்மத்தை நிலைநாட்டும் அதிகாரத்தையோ ஆட்சியையோ வழங்கினால், பதவி வெறியோ கர்வமோ மமதையோ நம்மை ஆட்கொண்டுவிடக் கூடாது. நபிகளார் காட்டித் தந்தபடி பொறுமையோடும் மன்னிப்போடும் விவேகத்தொடும் மக்களை அணுகவேண்டும். இதை சாத்தியப் படுத்தித் தந்த நம் இறைவனை அதிகமதிகமாகத் துதிக்கவும் அவனிடம் நம் பிழைகளைப் பொறுத்தருள வேண்டியும் கோர வேண்டும். திருமறையில் இறைவன் நபிகளாருக்குக் கற்றுக் கொடுப்பதைப் பாருங்கள்:

103:1-3 : அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வரும் போது, (முஹம்மதே!) அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக நுழைவதை நீர் காணும்போது, உமது இறைவனைப் புகழ்ந்து போற்றுவீராக! அவனிடம் மன்னிப்புத் தேடுவீராக! அவன் மன்னிப்பை ஏற்பவனாக இருக்கிறான்.

# பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள்

இவற்றில் இரு வகைகள் உண்டு:

● திட்டமிட்டு இஸ்லாத்தின் எதிரிகளால் பரப்பப்படும் குற்றச் சாட்டுகள்.

● சில முஸ்லிம்களின் நடவடிக்கைகளைக் கண்டு எழும் குற்றச்சாட்டுகள்.

முதல் வகை குற்றச்சாட்டுகள் பற்றி மேலே கண்டோம். எஞ்சியிருப்பது இரண்டாம் வகை குற்றச்சாட்டுகளே.. இவை எழுவதற்கு முக்கிய காரணம் ஒரு சில முஸ்லிம்கள் முஸ்லிம் சமூகத்தின் உரிமை மீட்பு என்ற பெயரிலும் சமூகத்தின் பாதுகாப்பு அல்லது தற்காப்பு நடவடிக்கை என்ற பெயரிலும் செய்து வரும் நடவடிக்கைகளே. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டார்கள் என்பதற்காக மாற்று மத சமூகத்தினர் மீது தாக்குதல்கள் நடத்துவது இஸ்லாமின் பார்வையில் எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்கள் இஸ்லாத்தைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்ளாததும் நபிகளாரின் உண்மை நடைமுறை பற்றி அறியாமையுமே இதற்குக் காரணம் ஆகும். இஸ்லாம் என்பது அனைவருக்கும் பொதுவான ஒரு கொள்கை. இது ஏதேனும் ஒரு நாட்டுக்கோ இனத்துக்கோ மொழிக்கோ நிறத்தவருக்கோ சொந்தமானது அல்ல. இக்கொள்கையை யார் வேண்டுமானாலும் ஏற்கலாம். ஒரு முஸ்லிமுக்குப் பிறந்துவிட்டோம் என்பதாலோ அரபு மொழியில் பெயர் வைத்து விட்டதாலோ யாரும் முஸ்லிம் ஆகிவிட முடியாது. முஸ்லிம் என்றால் இறைவனுக்குக் கீழ்ப்படிபவன் என்பது பொருள். அந்த அடிப்படையில் யார் அவ்வாறு இறைவனுக்குக் கீழ்படிந்து வாழ்கின்றார்களோ அவர்களே முஸ்லிம்கள். இஸ்லாம் என்றால் இறைவனுக்குக் கீழ்படிதல் என்று பொருள். அது ஒரு சீர்திருத்தக் கொள்கை. யார் வேண்டுமானாலும் இக்கொள்கையை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழலாம். இதற்கு ஒரு சாதியின் சாயமோ

இனத்தின் சாயமோ நாட்டின் சாயமோ பூசக் கூடாது. இக்கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் மற்ற மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டியவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது,

இன்னொன்று, இக்கொள்கையைப் பின்பற்றும்வரை தான் ஒருவர் முஸ்லிம், எப்போது இறைவனின் கட்டளைகளைப் பின்பற்றுவதை விட்டுவிட்டாரோ அப்போதே அந்த தகுதியையும் இழந்து விடுகிறார். இக்கொள்கையை ஏற்றவர்கள் ஒரு குழுவாக செயல்படகூடும். ஆனால் இக்குழு ஒரு இனம் சார்ந்த, அல்லது மற்ற மொழி சார்ந்த, அல்லது ஜாதிகளைச் சார்ந்த குழுக்களைப் போல தங்கள் குழுவின் மேம்பாட்டுக்காகவோ உரிமைகளுக்காகவோ போராடுபவர்கள் போன்று செயல்படக்கூடாது. இனவெறி, நிறவெறி, ஜாதிவெறி இவற்றுக்கு ஆட்பட்டவர்கள் மற்றவர்களை எதிரிகளாகக் காண்பது போல இஸ்லாத்துக்கு எதிராக செயல்படுபவர்களைக் காணக் கூடாது. காரணம் நமது நோக்கம் மக்களை கொன்றோ வென்றோ ஒடுக்குவது அல்ல. மாறாக நமது நோக்கம் மனிதர்களை சீர்திருத்தி அவர்கள் கரங்களாலேயே வீழ்ந்து கிடக்கும் தர்மத்தை தூக்கி நிறுத்தி அமைதியை நிலைநாட்டுவதும்தான்! இங்கு ஒவ்வொரு மனிதனும் நமக்கு வேண்டும். யாரையும் இழக்க நாம் தயாரில்லை! ஒவ்வொரு மனிதனும் நம்மைப் போலவே நம் இறைவனின் அடிமையே! நமது குடும்பத்தின் அங்கமே!

இக்கொள்கையை ஏற்றதனால் நமது மனித உரிமைகள் மறுக்கப்பட்டாலும் நாம் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டாலும் நபிகளார் காட்டித்தந்த படி பொறுமையையும் மன்னிப்பையும் கைகொள்வதன் மூலமே இந்த சீர்திருத்த இயக்கம் வெற்றிபெற முடியும். இப்பொறுமைக்கும் மன்னிப்புக்கும் பரிசாக மறுமையில் இறைவன் சொர்க்கத்தை வழங்கவுள்ளான் என்பதை நாம் நினைவு கூரவேண்டும். நமது உண்மை இலக்கு இறைவனின் பொருத்தத்தையும் அதன்வழி நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொக்கத்தை அடைவதும்தான் என்ற உண்மையை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

எங்காவது இஸ்லாத்தைப் பேணி வாழமுடியவில்லை என்றால் அதற்கு நம் தூதர் காட்டிச் சென்ற வழி அவ்வூரைத் துறந்து சென்று இஸ்லாத்தைப் பேணி வாழக்கூடிய இடத்தில் குடியேறி வாழ்வதுதான். அதை விடுத்துப் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் நடந்து கொள்வதோ அப்பாவிகளைத் துன்புறுத்துவதோ பொது இடங்களில் குண்டு வெடிப்பதோ முற்றிலும் இஸ்லாம் என்ற உயரிய கொள்கைக்கு எதிரானதாகும். தர்மத்தை நிலைநாட்டப் புறப்பட்டவர்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட முடியுமா யோசியுங்கள்.

# வாசகர் எண்ணம்

● ஜூலை மாத இதழ் படித்தேன். மாற்றுமத அன்பர்கள் இதைப் படித்தார்களானால் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கும் உரிமைகள் மற்றும் சுதந்திரம் பற்றி அறிவார்கள். அருமையான கட்டுரைகள், பாராட்டுகள், மாஷா அல்லாஹ்.

– **பிரபாகரன், அல்சூர், பெங்களூர்**

● ஜூலை மாத இதழ் மிக அருமை. இது பெண்களுக்கான சிறப்பிதழ் என்றும் சொல்லலாம். இஸ்லாத்தில் பெண்ணுரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ள விதம் மகிழ்ச்சி அளிக்கிறது.

– **என். காசிநாதன், கோலார் தங்கவயல்கள்**

● இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கும் உரிமையும் பாதுகாப்பும் ... சிறந்த விளக்கம். "நீங்கள் ஒன்றை வெறுக்கலாம், அதில் அல்லாஹ் ஏராளமான நன்மை ஏற்படுத்தி விடலாம்" "எதிரிகளை வெல்வது அல்ல இஸ்லாத்தின் நோக்கம், மாறாக சீர்திருத்தி பூமியில் தர்மத்தை நிலைநாட்டுவதே. எதிரி என்பதால் அவர்களின் உரிமைகளை மறுப்பதும் இஸ்லாம் தடை செய்யும் ஒன்று" மாஷா அல்லாஹ் சிறந்த விளக்கங்கள்.

– **முஹம்மது ரபி, பெங்களூர்.**

● ஜூலை மாத இதழில் ஹிஜாபை பற்றிய செய்திகள் அருமை பெண்ணடிமை தனம் என கூறியவர்களுாக்கு சாட்டை அடித்தது போல இருந்தது இதை படித்தால் அன்னிய பெண்களும் இஸ்லாத்தை ஏற்பார்கள்.

– **முஹம்மது ஆரிப், திருவண்ணாமலை**

● ஜூலை இதழ் பெண்களுக்கான் சிறப்பு மலராகவே வெளியிட்டுள்ளீர்கள். கையடக்கமான இதழில் வியக்கும் வண்ணம் அத்தனை செய்திகள். பெண்களுக்கான் சிறப்பு குணாதிசயங்களைப் பற்றி இஸ்லாம் கூறும் வழியில் சிறந்த வெளியீடு. தன்னைப் பெற்ற, உடன் பிறந்த, தான் மணம்புரிந்துள்ள யாவருமே பெண்ணாயிருக்கையில் பெண் இனத்தை இவர்கள் வெறுப்பது மிகப்பெரும் அநீதியும் அநாகரீகமும் ஆகும். இந்த மார்க்கம் ஒன்றே அவர்களை அன்புடன் அரவணைக்கிறது. ***'Hands that cradle build the nation'*** என்ற ஜவஹர்லால் நேரு அவர்களின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

– **ப. பீர் இலாஹி, உத்தமபாளையம்**

# பிரார்த்தனைப் பலகை

அன்புள்ளம் கொண்ட சகோதர சகோதரிகளே... கடந்தசிலவருடங்களாக என்னையும் என் இளையமகளையும் நோய்பாடாய் படுத்துகிறது எங்களின்நோய் தீர எல்லாம்வல்ல அல்லாஹ்விடம் துஆசெய்யுங்கள்,

– **வி.எம்.என்.ஷரீப் தும்கூர்2 கர்நாடகா**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

● இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.

● மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.

● முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60- ● ஈராண்டு சந்தா Rs.120-

Published from:

**House of Peace,**
PO Box no. 1726,
No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்

கோலார் தங்கவயல்: சகோ.பஷீர் அஹ்மத் 9845217262
ஓசூர் : சகோ. ர.ஃபீக் - 9994713191
தர்மபுரி: சகோ, அய்யூப் 9842627171
கோவை : சகோ. ஜுல்ஃபிகர்-8015714648
மதுரை: சகோ. ஆதில்- 9043967747
திருப்பூர் : சகோ. ஷேக் தாவுத் - 9150068919
திருச்சி : சகோ. திருச்சி முஸ்தஃபா -9865446344
குன்னூர்: சகோ. அப்துல் ரகுமான் - 9843622246
சென்னை: அப்துல் அக்பர் ஃபிர்தௌசி- 9944656942
சேலம் : சகோ. இப்ராஹீம் - 9994091364
தஞ்சாவூர்,கும்பகோணம்: சகோ. அப்துல்சலாம் - 9597285160
விழுப்புரம்: சகோ. அப்துல் கனி - 9790290002
திருநெல்வேலி: சகோ. ரிஃபாயி - 9840911985
ஈரோடு: சகோ. ஷேக் தாவுத் - 7373947869
மயிலாடுதுறை: சகோ. அமீர் ஹம்சா - 9942941190

Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No.KRNA/BGE/1057/2012-2014
posted at MBC Bangalore GPO b/w 25th to 27th of every month.
No of pages: 24+4
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

## எதிரிக்கும் நீதி செய்க!
## எதிரிக்கும் இறைவன் அல்லாஹ்வே!

இறைநம்பிக்கையாளர்களே ! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே - பயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை (யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான். (திருக்குர்ஆன் 5:8)

(அல்லாஹ் என்ற அரபுமொழி வார்த்தையின் பொருள் ‘வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்‘ என்பதே)

இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்வோருக்கு, மன்னிப்பையும், மகத்தான (நற்)கூலியையும் அல்லாஹ் வாக்களித்துள்ளான். எவர் நிராகரித்து, நம் திருவசனங்களையும் மறுக்கிறார்களோ, அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்.

(திருக்குர்ஆன் 5:9,10)